**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.**

**23 மாவட்டங்கள் கலந்து கொள்ளும் மாநில கூடைப்பந்தாட்டப் போட்டி**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் சார்பில், 2016–2017 ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான அரசு ஊழியர்களுக்கான **கூடைப்பந்து (Basketball)** போட்டிகள் **28.03.2017 முதல் 30.03.2017 வரை** பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் உள்ள மின்னொளி கூடைப்பந்து மைதானத்தில் வைத்து நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நாக்அவுட் முறையில் நடைபெறவுள்ளது. இந்த மாநில அளவிலான அரசு பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சென்னை, தருமபுரி, தேனீ, தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, மதுரை, கோயமுத்தூர், ஈரோடு, திருநெல்வேலி, திண்டுக்கல், வேலூர், ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருவாரூர் ஆகிய 16 மாவட்டங்களிலிருந்து ஆண்கள் அணியினரும், திருநெல்வேலி, கோயமுத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 7 பெண்கள் அணியினரும் என நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு பணியாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

மேற்படி 23 அணிகளுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 28.03.2017 அன்று காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி மண்டல முதுநிலை மேலாளர் திரு.ப.சிவகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். இதில் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநில கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் 30.03.2017 அன்று நடைபெறும் நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் **முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள்** தலைமையில், முதல் மூன்று இடங்களில் வெற்றிபெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வெற்றிக்கோப்பைகள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குகிறார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தமது செய்தி குறிப்பில் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.